**தலைப்பு 251 - விலை மதிப்பீட்டுத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 251 – விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 05 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனைகணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும்மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன.பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்குரிய வருமானங்களை சேகரித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டியின் 7.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக சேகரிக்கப்பட்ட ரூபா 119,601,489 ஆன தொகை கட்டுநிதி சீராக்கல் கூற்றில் சீராக்கப்பட வேண்டியதாக காணப்பட்டது. எனினும், அந்த பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்குகளில் பெறுவனவாக | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 119,601,489 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 நிதியல்லாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 30 ஆந் திகதிய SA/MAA/02/01/01 ஆம் இலக்க அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் ACA-6 மாதிரி திருத்தப்பட்டு அந்த மாதிரியிலி CIGAS வலைத்தள முறைமையின் மூலம் உருவாக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கை அந்த மாதிரியில் இணைக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | கைத்தவறுதலாக நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான SA 82 அறிக்கை கணக்குகளில் இணைக்கப்பட்டிருக்க வில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 29,078,410 செலவிடப்பட்டு கணனி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. திறைசேரியின் கணனி அச்சீட்டு SA 82 இல் அந்த சொத்துக்களின் பெறுமதியானது ரூபா 25,463,960 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 3,614,450 ஆன சொத்துக்கள் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தன. | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் BOS அறிக்கை மற்றும் பேரேடு ஆகியவற்றுக்கிடையே வேறுபாடொன்று காணப்படாததுடன் இந்த வேறுபாட்டிற்கான காரணம் சிகாஸ் மென்பொருளின் ஊடாக ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் திறைசேரிக்கு பதிவேற்றப்பட்ட போதிலும் அந்த சொத்துக்களின் கணனி வழு காரணமாக திறைசேரியில் கணக்கு | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | வைக்கப்பட்டிராத காணப்பட்டது. இது தொடர்பில் பல்வேறு தடவைகள் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவித்திருந்ததுடன் இந்த வருடத்திலும் அந்த வழுவை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2021 யூலை மாதத்தில் திணைக்களத்தின் வாகனங்களை கைதவிர்த்திருந்ததுடன் நிதியல்லாத சொத்துக்களில் அந்த வாகனங்களின் பெறுமதிகள் கைதவிர்ப்பின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. மோட்டார் வாகனத்தை விற்பனை செய்வதற்காக திறந்த கேள்வியின் அடிப்படையில் விலைக்கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக 03 விலைக்கேள்விகள் கிடைத்திருந்தன. அந்த விலைக்கேள்விகளுக் கிடையே ஆகக்கூடிய விலைக் கேள்வி பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்த இரு விலைக்கேள்வியாளர்கள் மோட்டார் வாகனத்தை கொள்வனவு செய்வதை நிராகரித்திருந்தனர். அதற்கமைய ரூபா 1,958,980 ஆன ஆகக்குறைந்த விலைக்கேள்வி பெறுமதியை சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வியாளருக்கு அந்த வாகனம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதியில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,050,000.00 ஆன மோட்டார் வாகனத்தை விற்பனை செய்வதற்காக திறந்த அடிப்படையில் விலைக்கேள்வி கோரப்பட்டு அதற்காக கிடைத்திருந்த கூறுவிலைகளுக்கிடையே முதலாவது கோரிக்கையாளர் இருவருக்கும் மோட்டார் வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு முடியாததாக தெரிவித்து எழுத்து மூலம் அனுப்பியிருந்தனர். அதனால் மூன்றாவது ஆகக்கூடிய விலைக்கு விலைக்கேள்வி சமர்ப்பித்த பெறுமதிக்கு மோட்டார் வாகனம் வழங்கப்பட்டிருந்தது. | கைத்தவிர்க்கப்பட்ட சொத்துக்கள் சரியான முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6.3 வைப்புக் கணக்கின் மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வைப்புக் கணக்கின் மீதி ரூபா 4,107,308 ஆக காணப்பட்டது. அந்த மீதியின் கூட்டுத்தொகை ரூபா 622,517 ஆன வைப்பு மீதிகள் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்ட போதிலும் அந்த காலாவதியான வைப்பு மீதிகள் தொடர்ந்தும் ரூபா 308,179 தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்ததன் பின்னர் ரூபா 312,400 தொகை 2022 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கொடுப்பனவு செய்யப்பட்டு ரூபா 1,938 அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. ஏனைய வைப்புக்கள் தொடர்பில் நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்கான பதில்களின் பிரகாரம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,935,608 மற்றும் ரூபா 395,667 ஆன மதிப்பீட்டு வருமானம், வருமானமாக கணக்கு வைக்கப்படாது மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த வருமானம் வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும் இந்த வைப்பிற்குரிய தகவல்கள் இல்லாதிருந்த காரணத்தால் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. வைப்பாளரை இனங்கண்டதன் பின்னர் மதிப்பீட்டு வருமானமாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்களத்தின் வருமானங்களை தாமதமின்றி இனங்கண்டு கணக்கு வைக்க வேண்டியமை. |

**1.6.4 ஏனைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களினால் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 5,340,931 செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் கட்டுநிதி சீராக்கல் கூற்றில் ரூபா 5,343,789 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 2,858 கட்டுநிதி சீராக்கல் கணக்கில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த ரூபா 2,858 ஆன தொகை திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் கட்டுநிதி கணக்கு வைக்கும் போது கூடுதலாக கணக்கு வைத்தலாக திருத்துவதற்கு இடப்பட்ட குறிப்பாகும். அந்த தொகை கட்டுநிதி பதிவு செய்யும் போது திருத்தப்பட்டுள்ளது. அதற்கமைய ஏனைய திணைக்களங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 5,343,789 என குறிப்பிடப்பட்டுள்ளது சரியானதாகும். | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது சரியான பெறுமதியை உள்ளடக்கி சமர்ப்பிக்க வேண்டியமை. |

**1.6.5 கட்டுநிதி சீராக்கல் மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி மீதி ரூபா 6,526,337 ஆக காணப்பட்டது. தீர்க்கப்பட்ட ACA-7 மாதிரியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுநிதி இணக்கக்கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி சீராக்கல் மீதி ரூபா 6,526,337 ஆக காணப்பட்டது. அந்த மீதி நிதிச் செயலாற்றல் கூற்றின் கட்டுநிதி மீதியுடன் சீராக்கிய போது ரூபா 13,052,674 ஆகும். எனினும் கட்டுநிதி சீராக்கல் மீதி மறை (-) ரூபா 6,526,337 ஆக காணப்பட | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் (ACA-7) அனைத்து வருமானங்களும் செலவினங்களும் சீராக்கப்பட்டதன் பின்னர் 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 6,526,337 ஆக காண்பிக்கப்பட்டதுடன் கட்டுநிதி சீராக்கல் கணக்கிலான மீதியான ரூபா 6,526,337 ஆன தொகை கழிக்கப்பட்டதன் பின்னர் பூச்சிய பெறுமதியைக் கொண்டுள்ளது. | அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் பிரகாரம் பெறுமதிகள் நடைமுறைக்குச் சாத்தியமான முறையில் சமர்ப்பிக்க வேண்டியமை. |

வேண்டிய போதிலும் அது திருத்தப்பட்ட ACA-7 மாதிரியில் சரியாக சமர்ப்பிக்காமையினால் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள பதிவுகளின் பிரகாரம் கட்டுநிதிக் கணக்கு மீதி பூச்சியப் பெறுமதியாக தர்க்க ரீதியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.6.6 செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ஏனைய செலவின தலைப்புக்களுக்காக திணைக்களத்தினால் ரூபா 9,362,692 செலவிடப்பட்டிருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான செலவினமாக ரூபா 18,751,392 காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 9,388,700 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நேர் முறைமையின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது குறுக்குப் பதிவுகள் உள்ளடக்கப்பட வேண்டியமைால் ஏனைய தீணைக்கங்களுக்கு குறுக்கு பதிவுகளின் மூலம் முற்பண பீ கணக்கிற்கு பதிவு செய்யப்பட்ட ரூபா 229,903 மற்றும் திணைக்களத்திற்காக ஏனைய திணைக்கங்களால் கணக்கு வைக்கப்பட்ட ரூபா 9,158,796 தொகையும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான செலவினமாக காண்பிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டியின் 7.6 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டியின் 7.6 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று காசு மற்றும் குறுக்குப் பதிவுகள் இரண்டையும் கருத்தில் கொண்டு நேர்முறையை பயன்படுத்தி தயாரிக்க வேண்டியதாக | முற்பணம் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்களின் பொழிப்பு SA-52 திறைசேரியின் அச்சீட்டு பிரதிக்கமைய முற்பணப் பெறுவனவுகள் ரூபா 34,139,173 தொகையும் முற்பண செலுத்தல்கள் ரூபா 36,124,024 உம் ஆகும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது. அதற்கமைய, முற்பண பெறுவனவுகள் ரூபா 31,861,642 தொகையும் முற்பண செலுத்தல்கள் ரூபா 36,353,927 தொகையுமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டியதாக இருந்தது. எனினும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையே ரூபா 34,139,173 மற்றும் ரூபா 36,124,024 எனுமாறு காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய காசுப்பாய்ச்சல் கூற்றின் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 2,277,531 இனால் மற்றும் முற்பண செலுத்தல்கள் ரூபா 229,903 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | ஏனைய வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 119,601,489 சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 12,225,054 ஆக ரூபா 107,376,435 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். இந்தப் பணம் வருமானம் அல்லாத பெறுவனவுகள் தலைப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளமையால் ஒட்டுமொத்த பெறுபேறு சரியாக காண்பிக்கப்படுவதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | - மேற்படி - |
| (ஈ) | வருமானம் அல்லாத வகைப்படுத்தலின் கீழ் திணைக்களத்தின் பெறுவனவுகள் எவையும் வெளிப்படுத்தப்பட்டிராத போதிலும் அந்த வகைப்படுத்தலின் கீழ் ரூபா 119,601,489 காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். ஏனைய திணைக்களங்களுக்காக சேகரிக்கப்பட்ட பணம் தவறுதலாக வருமானமல்லாத பெறுவனவுகளாக காண்பிக்கப்பட்டுள்ள போதிலும் ஒட்டுமொத்த பெறுபேறு சரியாக காண்பிக்கப்படுகின்றமையை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 20.03.02.09 வருமானக் குறியீட்டின் கீழ் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தில் வருமானமாக ரூபா 90,000,000 காண்பிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் நி.பி 85(2)(அ) பிரகாரம் நடவடிக்கை எடுக்காது வருமான மதிப்பீடானது ரூபா 82,000,000 ஆக திருத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் வருமானமாக ரூபா 107,658,875 சேகரிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் சரியாக எதிர்வு கூறப்படாமையால் நி.பி 85(2)(அ) பிரகாரம் சரியான வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் முதல் மாதங்களில் அதிகளவான காலம் அலுவலகம் மூடப்பட்டிருந்தமை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட நபர்களை ஈடுபடுத்தி அலுவலகப் பணிகளை மேற்கொள்ள நேர்ந்தமையால் ஆவணங்களின் பணிகளை உரிய முறையில் இடம்பெற்றிராததுடன் முதல் மாதங்களில் உள்ளபடியான வருமானம் செலவிடப்பட்டு ஆண்டிற்கான வருமான மதிப்பீடானது அதற்கமைய திருத்தப்பட்டது. எவ்வாறான போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதி மாதங்களினுள் வழமையான நிலைமையின் கீழ் செயற்படுவதற்கு இயலுமானதாக இருந்தமையால் எதிர்பார்த்த அளவினை விட அதிக வருமானத்தை சேகரித்துக் கொள்வதற்கு இயலுமை கிடைத்திருந்தது. | வருடாந்த மதிப்பீடுகளை இயலுமான அளவில் சரியானதாகவும் நடைமுறைக்கு சாத்தியமான தாகவும் தயாரிக்க வேண்டியமை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் வருமானங்கள் தொடர்பில் நிதி அதிகாரம் சாட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 135 இன் கீழ் அதிகாரங்களை ஒப்படைக்கும் போது வருமானங்கள் தொடர்பிலான அதிகாரங்களை உள்ளடக்குவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2015 யூலை 22 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானத்தினை கணிப்பிடும் போது அதற்கான அடிப்படை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் போதிய தகவல்களை உள்ளடக்கிய மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கினேன். | அரச நிதிக் சுற்றறிக்கையின் அறிவுரைகளுக் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 692,250,571 ஆன நிலுவை மதிப்பீட்டு கட்டண வருமானத்தில் ரூபா 459,388,974 அல்லது 66 சதவீதம் 01 முதல் 13 வருடங்களுக்கு இடைப்பட்ட காலவீச்சில் நிலுவையாக காணப்பட்டது. | நாட்டினுள் நிலவிய கொவிட் தொற்றுநோய் பரவலுடன் அலுவலகப் பணிகள் இடைநிறுத்தப்பட்டமையால் நிலுவை வருமானத்தை சேகரிக்கும் பணிகள் ஓரளவு நிறுத்தப்பட்டிருந்ததுடன் தற்போது உரிய பிரதேச அலுவலகங்களின் மூலம் மற்றும் சட்டப் பிரிவின் ஊடாக நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றது. இதற்கு மேலதிகமாக நிலுவைக் கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட நிலுவை வருமானக் குழுவின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய நிலுவை வருமானத்தை அறவிடுதலை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பல வருடங்களாக நிலுவையாக காணப்படும் வருமானத்தை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது கடந்த வருடத்தின் இறுதியில் உள்ளபடியாக காணப்பட்ட ரூபா 467,046,699 தொகையான நிலுவை வருமானத்தில் ரூபா 7,657,724 அல்லது 1.63 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. காலாவதியாகியுள்ள | நாட்டினுள் நிலவிய கொவிட் தொற்றுநோய் பரவலுடன் அலுவலகப் பணிகள் இடைநிறுத்தப்பட்டமையால் நிலுவை வருமானத்தை சேகரிக்கும் பணிகள் ஓரளவு நிறுத்தப்பட்டிருந்ததுடன் தற்போது உரிய பிரதேச | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வருமானங்களை அறவிடுவது மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியது. | அலுவலகங்களின் மூலம் மற்றும் சட்டப் பிரிவின் ஊடாக நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றது. | |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 03 அரச முயற்சிகளினால் ரூபா 252,075,609 ஆன மதிப்பீட்டு வருமானம் நிலுவையாக முற்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்டது. அந்த நிலுவை வருமானங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | திறைசேரியின் பிரதிச் செயலாளரின் **MF/DST – R/Val/MUD/**1 மற்றும் 2021.09.16 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அரச அபிவிருத்தி திட்டத்தினை முன்னுரிமையாகக் கொண்டு இனங்காணப்பட்டுள்ள நேர்முதலீட்டு செயற்திட்டங்களுக்காக வழங்கப்படவுள்ள காணிகள், ஆதனங்களுக்குரிய மதிப்பீடுகள் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய நிலுவைப் பணம் குறித்த காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்காக தெரிவு செய்யப்படும் முதலீட்டாளரால் குத்தகைப் பெறுமதியின் 25 சதவீதம் நகர அபிவிருத்தி அதிகார சபையில் வைப்புச் செய்வதற்கும் மதிப்பீட்டுத் திகதி முதல் ஆண்டினுள் தீர்ப்பனவு செய்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய நகர அபிவிருத்தி அதிகார சபையினால் குறித்த நிலுவைப் பணம் அறிக்கையிட்ட திகதி முதல் ஒரு வருட காலத்தினுள் அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கை காணிகள் மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் மற்றும் | நிலுவை வருமானங்களை நிறுவனங்களுடன் கலந்துரையாடி குறித்த நிலுவை வருமானங்களை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேசிய சேமிப்பு வங்கி ஆகிய நிறுவனங்களின் நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நிலுவை வருமானக் குழு பரிந்துரைத்தமையால் அதற்கமைய மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கும் நிதியமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. | |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் திணைக்களத்தின் மொத்த நிலுவை வருமானத்தின் 69 சதவீதம் அல்லது ரூபா 478,092,636 பாரிய கொழும்பு மாகாண மதிப்பீட்டு அலுவலகத்தினால் சேகரிக்கப்பட வேண்டியதாக காணப்பட்டது. | பாரிய கொழும்பு மதிப்பீட்டு அலுவலகத்தினால் கிருலப்பனை, இராஜகிரிய ஆகிய பிரதேச செயலகங்களை உள்ளடக்கும் வகையில் மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்தப் பிரதேசத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியை போன்றே மதிப்பீட்டு கட்டணங்களும் அதற்கமைய பாரிய பெறுமதியைக் கொண்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுக்கான மதிப்பீட்டுக்கான நடவடிக்கைகளும் பெரும்பாலும் பாரிய கொழும்பு மாகாண அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் மேற்படி (i) தகுதி மூலம் காண்பிக்கப்பட்டுள்ள விதத்தில் நிலுவை மதிப்பீட்டுக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (ஏ) 11 மாகாண அலுவலகங்களினால் அறிக்கையிடப்பட்டிருந்த ரூபா 7,269,070 ஆன நிலுவை வருமானம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியிலான நிதிக்கூற்றுக்களில் நிலுவை வருமான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | கைதவறுதலாக நிலுவை மதிப்பீட்டுக் கட்டணங்களுக்காக உள்ளடக்கப்படாத ரூபா 7,269,070 ஆன தொகை எதிர்காலத்தில் திருத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | நிலுவையாக உள்ள அனைத்து வருமானங்களும் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

### 2.2.1 நிதியேற்பாடுகள் விளைவற்றிருந்தமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மூன்று செலவின விடயங்களுக்காக ரூபா 5,500,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் எதுவித பயன்பாடும் மேற்கொள்ளப்படாது நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் மூலம் வெளிநாட்டு பயணங்களை இடைநிறுத்தியமையால் வெளிநாட்டு பயணச் செலவினங்களை மேற்கொள்ள நேர்ந்திராததுடன் திணைக்களத்தின் வலைத்தளம் ICTA நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு நவீனமயப்படுத்தல் செலவின விடயம் 2106 நிதியேற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ள போதும் குறித்த பணிகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட வில்லை. அதற்கு மேலாக இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் நாணயக் கடிதங்களை திறப்பதில் சிரமங்கள் ஏற்பட்டமையின் காரணத்தால் செலவின விடயம் 2509 நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகள் சரியானதாகவும் நடைமுறைக்குச் சாத்தியமானதாகவும் தயாரிக்கப்பட வேண்டியமை. |

**2.2.2 மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 10 செலவின விடயங்களுக்காக ரூபா 242,000,000 ஆன மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றில் ரூபா 82,953,301 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் ரூபா 159,046,699 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. அதற்கமைய, ஒவ்வொரு செலவின விடயங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டை 35 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சிலான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்குரியதாக திட்டமிடப்பட்டு அதற்காக செலவின மதிப்பீடுகள் உரிய முறையில் தயாரிக்கப்பட்ட போதிலும் கொவிட் நிலைமையின் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தமை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான ஊழியர்கள் வரவழைக்கப்பட்டமை காரணமாக மீண்டெழும் செலவின விடயங்கள் பெரும்பாலானவற்றின் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. திட்டமிட்டவாறு ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறாமையால் 1001 மற்றும் 1003 செலவின விடயங்களில் சேமிப்புக்கள் இடம்பெற்றிருந்ததுடன் வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் மூலம் வெளிநாட்டு பயணங்கள் நிறுத்தப்பட்டது. அவ்வாறே இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் வங்கிகளினால் நாணயக் கடிதங்கள் திறக்கப்படாத காரணத்தினால் கணனிகளை கொள்வனவு செய்ய முடியாதிருந்தமையும் மூலதன நிதியேற்பாடு எஞ்சியிருந்தமைக்கு காரணமாக அமைந்திருந்தது. | நி.பி.50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் இயலுமான அளவில் சரியானதாகவும் நடைமுறைக்கு சாத்தியமானதாகவும் தயாரிக்க வேண்டியமை. |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இடமாற்றம் பெற்றுச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற, ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் பணி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 910,372 ஆன கடன் மீதி நிலுவையாக காணப்பட்டது. அக்கடன் மீதியில் 36 சதவீதம் அல்லது ரூபா 328,720 தொகை 1991 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இந்த கடன் மீதியை அறவிடுவதற்கு உரிய பணிகள் இடம்பெறுவதுடன் அறவிடுவதற்கு முடியாததாக உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளை பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. | நீண்டகாலமாக நிலுவையாக உள்ள கடன் மீதிகளை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் மற்றும் திறைசேரியின் கணனி அச்சீட்டு பதிவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிலுவைக் கடன் மீதி ரூபா 93,219,454 ஆக காணப்பட்ட போதிலும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் நிலுவைக் கடன் மீதி ரூபா 93,150,056 ஆக காணப்பட்டது. அதற்கமைய, ரூபா 69,398 ஆன வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த வேறுபாடு ஒப்பிடப்பட்டு திருத்துவதற்கு தவறியிருந்தது. | 2015 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று வந்திருந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 71,024 ஆன கடன் மீதி 2018 ஆம் ஆண்டின் போது நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் முற்பண மீதி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ள போதிலும் இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளின் கீழ் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் கணக்கு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்காமையால் இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளதுடன் அந்த | வேறுபாட்டினை இனங்கண்டு புத்தகங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | தவறினை திருத்துவதற்கு உரிய பணிகள் இடம்பெறுகின்றன. | |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2020 ஆம ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் போது பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களாக இனங்காணப்பட்ட 96 சொத்து உருப்படிகளை கைத்தவிர்ப்பதற்கு 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கைத்தவிர்ப்பிற்காக இனங்காணப்பட்ட சொத்துக்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 18,400 ஆக காணப்பட்ட போதிலும் அந்த சொத்துக்களின் புத்தகப் பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பொருள் மெய்மையாய்வு பணிகள் தாமதமடைந்தமை மற்றும் மாகாண அலுவலகங்களிலிருந்து அறிக்கைகள் தாமதமாக கிடைத்த காரணத்தினால் கணக்காய்விற்கு அறிக்கைகளை அனுப்புவதற்கும் கைதவிர்ப்பு நடவடிக்கைகள் தாமதமாகியது. கைதவிர்ப்புக்குரிய பணிகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் சொத்துக்களின் புத்தகப் பெறுமதி கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>சொத்துக்களை கைதவரித்த பின்னர் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு முன்னர் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் சொத்துக்களை மொடியூலின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய பெறுமதி இனங்காணப்பட்டு பேரேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் துரிதமாகவும் சரியானதாகவும் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் காசோலை புத்தகங்களை கையெழுத்திடுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள 05 உத்தியோகத்தர்கள் மாத்திரம் பிணை வைப்புக்களை வைத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைத்தல் தொடர்பில் அமைச்சின் அறிவுரை கோரப்பட்டுள்ளதுடன், கிடைக்கும் அறிவுரைக்கமைய மேலதிகப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**4. மனிதவள முகாமைத்துவம்**

**4.1 இணைப்பு செய்யப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 515 அல்லது 46 சதவீதமானது வெற்றிடமாகக் காணப்பட்டது. அந்த வெற்றிடங்களில் 263 பதவிகள் அல்லது 51 சதவீதம் மூன்றாம் நிலை மட்டத்திலான மதிப்பீட்டு பணிகளை நிறைவேற்றும் உத்தியோகத்தர்களின் பதவிகளாக காணப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன் விலைமதிப்பீட்டாளர் பதவிக்காக 62 பேர் சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு உரியதாக தயாரிக்கப்பட்ட பரீட்சை அறிவித்தல் அங்கீகாரத்திற்காக அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் உதவி | அத்தியவசதியமான பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மதிப்பீட்டாளர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2022.05.29 ஆந் திகதி பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டதுடன் அந்த பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உதவி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சுமார் 8 வருட காலமாக திணைக்களத்தினால் ஆட்சேர்க்கப்பட்டிருக்க வில்லை. இறுதியாக உதவி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் 2013 ஆம் ஆண்டின் போது இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் வெற்றிடங்கள் பல வருடங்களாக காணப்பட்டதுடன் மதிப்பீடு தொடர்பான பட்டப்படிப்புடனான பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் பட்டதாரிகளிலிருந்து இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |